ஆதிமூல நொண்டி நாடகம்

பதிப்பாளர்

ம.சிவகாமசுந்தரி

தமிழ்இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.
2008

ம. சிவகாமசுந்தரி

ஆதிமூல நொண்டி நாடகம்

சுவடியியலும் பதிப்பியலும் என்ற பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

ம. சிவகாமசுந்தரி,
பதிப்பாளர்

நெறியாளர் :

முனைவர் **வீ. அரசு,**
பேராசிரியர்,

தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சூன்-2008

சுவடியியலும் பதிப்பியலும் என்ற
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண்:

நெறியாளர் சான்றிதழ்

முனைவர் **வீ. அரசு,**
பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'ஆதிமூல நொண்டி நாடகம்' என்னும் தலைப்பிலான ஓலைச் சுவடியை, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் நடைபெற்றுவரும் சுவடியியலும் பதிப்பியலும் எனும் பட்டயம் பெறுவதற்காக ம.சிவகாமசுந்தரி அவர்கள் 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் எனது மேற்பார்வையில் பதிப்புச்செய்தார் என்றும், இப்பதிப்பேடு இவர்தம் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

(வீ.அரசு)

நெறியாளர்

இடம் : சென்னை - 5
நாள் :

பதிப்பாளர் உறுதிமொழி

ம.சிவகாமசுந்தரி,
முதுகலை முதலாமாண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'ஆதிமூல நொண்டி நாடகம்' என்னும் தலைப்பிலான ஓலைச் சுவடியை, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் சுவடியியலும் பதிப்பியலும் எனும் பட்டயம் பெறுவதற்காக 2007 - 2008 ஆம் கல்வி ஆண்டில் முனைவர் வீ. அரசு அவர்களின் மேற்பார்வையில் பதிப்புச் செய்தேன் என்றும் இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்றும் உறுதியளிக்கிறேன்.

(ம.சிவகாமசுந்தரி)

ஆய்வாளர்.

இடம் : சென்னை - 5.
நாள் :

உள்ளடக்கம்

இயல்	பக்கம்
நன்றியுரை	
பதிப்புரை	
நூல் – ஆதிமூல நொண்டி நாடகம்	
செய்யுள் முதற் குறிப்பகராதி	

நன்றியுரை

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

தமிழகத்தின் தாய் பல்கலைக்கழகமாம் சென்னைப் பல்கலைக்கழத்திற்கு எனது முதற்கண் வணக்கத்தையும் நன்றியையும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையின் முதுகலை படிக்க வாய்ப்பளித்த துறைத் தலைவர் என் இனிய ஆசான் பேராசிரியர் வீ.அரசு ஐயா அவர்களுக்கும், சுவடியியல் மற்றும் அதன் பதிப்பு நெறி முறைகள் பற்றிய கருத்துகளை வழங்கி யாப்பு பற்றிய செய்திகளை மிகத் தெளிவாக உணர்த்தி, எனது இப்பதிப்பு நல்ல முறையில் வெளிவருவதற்குப் பல்வேறு வகைகளில் ஆலோசனைகளை வழங்கி எனக்கு உறுதுணையாக நின்ற முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் என் நன்றி என்றென்றும் உரியது.

சுவடியியலும் பதிப்பியலம் எனும் பட்டயப் படிப்பில் சேர அனுமதி நல்கி சிறந்த முறையில் வகுப்பு நடத்திய தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் எனது நெறியாளர் முனைவர் வீ. அரசு அவர்களுக்கும் எனது நன்றியை உரிதாக்குகிறேன்.

முனைவர் கோ.பழனி, முனைவர் ஆ.ஏகாம்பரம் அவர்களுக்கும், நாடும்தோறும் நட்புடன் உதவிய இலக்கியத்துறை அலுவலர்கள் திரு.சுந்தர், திரு சங்கரன் அவர்களுக்கும் எனது நன்றி.

நான் பதிப்பிப்பதற்கு ஓலைச் சவடியை நல்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகத்திற்கும், அந்நூலகத்தின் காப்பாட்சியர் முனைவர் ச. சவுத்திர பாண்டியன் அவர்களுக்கும் எனது நன்றி.

என்னை நல்வழியில் அழைத்து சென்று இத்தகைய நிலைக்கு உயர்த்தியவர்களும், என்றும் நான் வணங்கும் தெய்வமாக விளங்கும் என் பெற்றோர்களின் திருபாதம் தொட்டு என் நன்றியை நவில்கிறேன். இன்றுவரை எனக்கு உதவி புரிந்த சகோரதர்கள் ம.சபரீசன், ம.வெங்கடேஸ்வரன் ஆகியோர்க்கும் என் அன்பினை தெரிவித்துக் கொள்கிறேன். உற்ற காலத்தில் எனக்கு உதவி புரிந்த நண்பர்களுக்கு நன்றி.

என் வாழ்க்கையை செம்மைப்படுத்திய அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கு என் நன்றி.

இவ்விலக்கியத்தை கணினியில் சிறப்பாக டைப் செய்த திருமதி. சுதா இராதாகிருஷ்ணன் மற்றும் இதைவடிவமைத்து நூலாக்கம் செய்த சிவஸ்ரீ கிராபிக்ஸ் உரிமையாளர் திரு.கி.உதயகுமார் அவர்களுக்கும் என் நன்றிகள்.

என்றும் அன்புடன்,
ம.சிவகாமசுந்தரி

பதிப்புரை

இயல், இசை, நாடகம் என்ற மூன்று கூறுபாடுகளையும் தன்னகத்தே அடக்கிய முத்தமிழ் என்று தமிழ் மொழி சிறப்பிக்கப் படுகிறது. உடலின் செயற்பாடு நாடகம் மனத்தின் வெளிப்பாடு இயல், நாவின் புலப்பாடு இசை என முத்தமிழ் மனம், மொழி, மெய்பாடுகளோடு நெருங்கிய தொடர்புடையன.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலானறி வழக்கம் (தொ. 999)
என்ற அடிகளால் அறியலாம்.

சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் நாடக அமைப்பு முறையைக் கூறுகிறது. சிலப்பதி காரத்திற்கு அடியார்க்கு நல்லார் வகுத்த உரையில் சயந்தம், செயிற்றியம், முறுவல், பரத சேனாபதியம், மதிவாணா நாடகத்தமிழ் நூல் முதலான நாடகத்தமிழ் இலக்கண நூல்கள் இருந்தன என்றறிய முடிகிறது. இராசராசனுடைய வெற்றியைச் சிறப்பிக்கும் வகையில் இராசராசேசுவர் நாடகம் நடிக்கப்பட்டதாகத் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

17, 18ஆம் நூற்றாண்டுகளில் தஞ்சையை மராட்டியர்கள் ஆண்டகாலத்தில் கோயில்களில் நாடகங்கள் நடக்கப்பட்டன. சரபோஜி மன்னர் பற்றிப் பாடப்பட்ட சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் தஞ்சையில் நடிக்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையும், கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும் பள்ளு, குறவஞ்சி போன்ற இசைநாடக நூல்களாக எழுந்தன.

செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் வேசையர் வலைப்பட்டு, நோயும் வறுமையும் அடைந்து துன்புறுவதாகவும், இறுதியில் மனம் திருந்துவதாகவும் பாடுகின்ற நொண்டி நாடகம் இந்நூற்றாண்டுகளில் எழுதப்பட்டது. இது சிந்து என்ற யாப்பு வகையில் பாடப்பட்டது. இத்தகைய நொண்டி நாடகங்களில் பாடப்பட்ட சிந்து என்னும் யாப்புக்கு நொண்டிச்சிந்து என்ற பெயரும் ஏற்பட்டது. ஆதிமூல நொண்டி நாடகம் விருத்த யாப்பில் அமைந்துள்ளது. தரு என்ற அமைப்பும், வசனம் பேசும் நடையும் உள்ளது.

சுவடி விவரம்

ஆதிமூல நொண்டி நாடகம் எனும் ஓலைச்சுவடி சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகத்தில் R.No. 7484 என்ற வரிசை எண்ணில் உள்ளது. இச்சுவடியின் பதிப்பாக இந்நூல் அமைகிறது.

இந்த ஓலைச் சுவடியிலிருந்து படி எடுக்கப்பட்ட கையெழுத்துப் படியிலான தாள் சுவடி ஒன்றும் கிடைக்கிறது. 68பக்கங்களைக் கொண்டது. இத்தாள் சுவடி R.No. 7484 என்ற வரிசை எண்ணில் அரசினர் கீழ்திசை சுவடிகள் நூலகத்தில் உள்ளது.

சுவடி அமைப்பு

கடவுள் வாழ்த்தாக அமைந்த இரண்டு பாடல்களையும் சேர்த்து மொத்தம் 88 பாடல்கள் சுவடியில் காணப்படுகிறது. ஒரு பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. ஓலைச்சுவடி ஆங்காங்கு சிதிலமடைந்து எழுத்துகள் தெளிவாகத் தெரியாத நிலையில் உள்ளன. அந்நிலையில் தாள் சுவடியைப் பார்த்து ஒப்புநோக்கி பதிப்பு செய்யப்பட்டுள்ளது.

தாள் சுவடியில் பல இடங்களில் பிழைகள் காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுவடியிலும் பக்க எண் தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாப்பமைப்பு

ஓலைச்சுவடியில் எழுத்துகள் இடைவெளி இன்றித் தொடச்சியாக எழுதப்பட்டுள்ளன. ஒற்றெழுத்துகள் புள்ளி வைத்து எழுதப்பட வில்லை. குறில், நெடில் வேறுபாடு இல்லாமல் எழுதப்பட்டுள்ளது. சில இடங்களில்

எழுத்துகளின் மேல் திருத்தம் செய்யப் பட்டுள்ளது.

ஓலைச்சுவடியில் காற்று – காத்து போன்ற பேச்சுவழக்குச் சொற்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. மேலுமம எழுத்து மாற்றங்களும் காணப்படுகின்றன.

தாள் சுவடியில் யாப்பு அமைப்புடன் பாடல் எழுதப்பட்டது. ஓலைச்சுவடிக்கும், தாள் சுவடிக்கும் இடையே சில இடங்களில் எழுத்து மாற்றத்தையும் சொல் மாற்றத்தையும் காண முடிகிறது. ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்துள்ள இந்நூற் செய்யுட்கள் யாப்பு அடிப்படையில் இப்பதிப்பில் பிரித்து அமைக்கப் பட்டுள்ளது.

நூல் அமைப்பு

இந்நூல் இறை வணக்கத்துடன் தொடங்குகிறது. முதல் வாழ்த்துப்பாடல் விக்கினேஸ்வரன், சரஸ்வதி, ஈஸ்வரன், உண்ணமலை அம்மன், ஸ்ரீராமஜெயம் என்றும் இரண்டாவது பாடல் அனுமன் எனும் கடவுளையும் போற்றுகிறது. நூல் முழுவதும் விருத்த யாப்பில் அமைந்துள்ளது. தரு என்ற அமைப்பும் உள்ளது.

இந்நாடகம் செல்வக்குடியில் பிறந்தவன். பரத்தையிடம் சென்று மனம் திருந்து கால் நொண்டியாக வருவதாக காட்டப்பட்டுள்ளது. கதையமைப்பில் பாடப்பட்டுள்ளது.

ஆதி மூலேச நொண்டி நாடகம்

விக்கினேஸ்வரன் துணையுண்டாகவும்

சரஸ்வதி அம்மன் துணை உண்டாகவும்

அண்ணாமலை ஈசுவரன் துணையுண்டாகவும்

உண்ணாமலை அம்மன் துணையுண்டாகவும்

ஸ்ரீராமஜெயம் துணையுண்டாகவும்

ஸ்ரீராமோ வீர அனுமந்தா பாற்கடதிவதனா

ராக்ஷுத கோலாகலா வாயு புத்திரா வாயிலாக

வாகனாதா ஸ்ரீமறீஞ் சர்வபூத பாத பீக்ஷுர

வேதாளா தீவா நாசு நாசு மருது மருது வரவர

வாசி வாசி யிம்மட்டோயில்வீர் அனுமந்துதி

ஹரி ஓம்
ஆதிமூல நொண்டி நாடகம்

1. திருவளர் வாழும் திருமூலர் தம் நொண்டி
பாட்டை
கருவளர் மாரிமுத்துக் கார்ப்பித்து மறிவால்
சொன்ன
பெருவளர் புவியில் வாழு பேறங்களும்
கேட்டுமேற்
அருவளர் பொருளுக்கொப்பான் அமுர்த
மென்றுளமகிழ்ந்தார்
பூமலி கொண்டவேணி புனிதரே ஆதிமூலர்
மாமகிழ்கூறவாழும் வருணையம்பதி நன்னாட்டில்
நான்முகன் அருளான் நொண்டி நாடகந்தன்னை
பாட
காமருங்க ரத்திற் சிந்திக் கணபதி காப்பு தாமே
இன்னநாடகத்தை யானு யிறையாதி மூவீசர்
நாட்டில்
பன்னு செந்தமிழோர் முன்னே பாடவுந்
துணிந்தவானு
அன்னமின்னிடையின் முன்னே
அணிவிதிக்கரியக்காகம்
தன்னிடை காட்டுகின்ற தன்மையே தாகுந்தானே

தனனதனன தன தனதனதன
தனனதன தன தந்தனா

2. மணிக்கழுக்கழறுசிகற சினகர மதில் கட
முவிய்யருண் புரிநகர் வாசாத மூலீசர்நாட்டி
னிலே (தந்தனா)

அணியு மிசை பெரு மணியமுதுற சொல்
அமுர்தசச முறு தரி ... ாருகதை
ஆசையோடிது பேசி ஓதிடவே (தந்தானனா)

மருவும்வுணர்கள் அலைவதெனங்வரு
மயிடன்முடிபட விடரு முமையருள்
மைந்த னாகிய தந்தி மாமுக னே (தந்தானனா)
கருது மிமையவர் புதிகள் புகழ்க
மயில்க்கடவுள் சவணக் குமரகுருபாக்
கந்தனே யருள வந்து தித்தருள்வாய்
(தந்தானனா)

புவியிடா வொரு முனியும் உமைமகிழ்ப்
புரியநடன மிடுஞ: சாண நஸணி
பூணுமம் பலவாணன் துணையே (தந்தனனா)
கவிகள் கெடவரும் வருண மழைகள்பொழி
தரு கவுரிதிரிபுரத்த கனியுழை சிவகாம
சுந்தரி நாமமுந் தொழுவேன் (தந்தானனா)

சுருதிஅயன் மகிழ மனவி0மதுமழை சொரிய
முளரியின்
விதியினபொரு சரசோதி நாயகி பாதமே
துணையே
(தந்தானனா)

3. கரிய முகிழ்கிற வரியனுறைமுறைக்
கமலையடி தொழுத மாமுனிவர்கள்
காளிதாளை என்னாளுமே மறவேன்
(தந்தானனா)

சித்தாண்டி வருவது விருத்தம்

பங்கய னறியாச் சென்னிப் பாஞ்சட ராதிமூலச்
யிங்கித மாநாட்டில் யிருப்பவர் யெவரு மெச்ச
கங்கணங்கட்டியாடி களரியில் வரும்நொண்டிக்கி
வங்கணமெனுஞ் சித்தாண்டி வந்துமுன்
தோன்றினானே

வசனம் :

அகோ சுவாமி எப்படியென்றால்
ஆதிமூலீசர் திருநாட்டிலே யினிமேல் வானூ
நின்ற சோசக் கோளரி யென்னும் பெயருடைய
நொண்டிக் கி வங்கடைக் காரனாகிய சித்தாண்டி
வருகிறான் பராக்கு

தரு

சித்தாண்டி வந்தானே – சொகுசுக்கார
சித்தாண்டி வந்தானே
சித்தாண்டி வந்தானே தேவ ராதிமூலர்
பெத்தாண்டி முருகளைப் பேணித்
தொடாங்கோதி
(சித்தாண்டி வந்தானே)

4. காவிச் சோமன்கட்டி
கைச்சோமக்கலங்கொட்டி
கடவிப்பாடிமுட்டிக் கொண்டு வாவெனவேதட்டி
(சித்தா)
நீஇத்தோதி யென்றாடித் தெருவில் மடங்கள்தேடி
அக்குத் தாவடஞ்சூடி ஆதிமூலரை நாடி -
(சித்தாண்டி)

சைவமதங்கள் பேசித்தாண்டிக் கையை வீசி
மெய்யில் வெண்ணீறு பூசி வீணாண்டிகள்யேசில்

வசனம் :

இப்படியாக வந்த சித்தாண்டி
யானவன் ஆதிமூலீசர் திருக்கோவிலே
நின்று தேடித்திரம் பண்ணுவது - திரு

ஆனந்தக்களிப்பு :

கனதந்தனா தந்தனானா தந்தனானா
தனதந்தனானா
காண்டீபன் வல்லடி கொண்டாய் – ஆல
காலத்தை உண்டத் திரிசூலப் பிரசண்டா
பாண்டியன் கையடி கொண்டாய் - வினைப்
பத்தறுத் தென்னை முத்தியிற் கண்டக கண்டாய்
மாலுக்கு மயனுக்கு மெட்டாத தாகுவன்
பெண்களிடத்து இல்தன்னைப் பரித்திட்டாய்

நாலுக்கு மேலாகிவிட்டாய் – உன்னை
நம்பின பேர்களை வெம்பவும் மொட்டாய்
அமுர்த வல்க் கொருபாகா – மண்ணோ
டாகாயமாய் நின்ற யேகா வேகா

கமலக்கேள்வன்ப் பணியோதூ – சடை
கங்கைக்கி மோகாப்பிர சங்கதி யாதூ
கோடி சூரியப் பிரகாசா – மணிக்
கோபுரஞ் சூழ் வருணாபுரி வாசா
ஆடியதிசையின் னேகாசா – பாஞ்
சோதியே யெனையாளு மாதி மூலேசா
தனதந்தனாத்தெனனா

இனி நொண்டி வருவது விருத்தம்

அலைகடல்விட முண்டன்று ஆதிமூலீசர்நாட்டில்
பலகரைக் கோர்வை பூண்டுப் பட்டாணி
கச்சைக்கட்டி
திலதமொன்றெ முதிமேனி திகழும்
நீறணிந்துகுல்லா
தலை தனிற்புனைந்து நொண்டி
சபைதனிற்றோன்றினானே
அளவற்றக்கெடி பெற்ற வீரன்யிவன்
அல்லாதுவேறெதிரில்லாத சூ...
க்களவுத் தொழிலுக் கொரு தீரண்மனை
கட்டியாடிக் கொண்டு சாயக் கிட்டியே வந்தானே
கோர்வையிட்ட சங்கு மணி சூட்டிக் கையிற்
குஞ்ச மு.... திக்கஞ்சன முந்தீட்டி

5. வீர வெண்டையத் தைக்கால் பூட்டி நொண்டி
வேடிக்கையாக வந் தாடிக் கொண்டானோ
கையிற் கன்னக் கோல் பிடித்துக் கொண்டு
நொண்டி
கால்பில் அரைப்பில்க் கற்றவரைத் தொண்டு
செய்யச் சொல்வேன் னேறுபனைத் துண்டு—கால்
சேர்த்துகட்டி ஆடி சபைக்கேத்தான் வந்தானே
(தானத்தே)
கோதில் வாப்பதங்களைப் பாடி - வெகு
கொத்துக் கெடத்தர தலைமீதில் முத்துக்குச்சிசூடி
ஆதிமூலீசரைக் கொண்டாடி - மகிழ்ந்தாடி
ஆளரியை சுத்தி ஓடிக்களித்தா னே
(தானத்தோந்தானந்தனனா)

வேறு : திரு

தெந்தின தினதின னா தெந்தினாதினா தினா
தெனனானா –
கல்லடந்தள தொட்டு – சடையிற்
தல்லடந்தளை தொட்டு – சடையிற்
தங்கிய கச்சைக்கு சங்குவிட்டு
வல்லவாட்டுமிட்டுக் களரியில்
வாக்குள்ள நொண்டியும் வந்தானே

6. எதுத்தவர் மார்பாணி சோர மிடுந்
தொழிலுக்கிவர் நெடுந்தோணி
சினத்திடுங் கால் கோணி - களரியில்
சிங்கார நொண்டியும் வந்தானே
(தெந்தினா)

முறு க்குமீசை திருத்தி - ஆதி
மூலீசர் தாளை மனமே விருத்தி
நறுக்குக் காலை வருத்தி - நொண்டி
நாடகமாடவும் வந்தானே – நெந்தி
கல்கார முண்டன் கன்னடன்
கலருடன் வாய்த் தெறுக் கண்டன்
புல்க்கார முண்டன் நொண்டி
புகழ்பெருகக் களரியில் வந்தானே
(தெந்தினதினனா)

விருத்தம்

வந்ததோர் நொண்டி தானும் வள்ளலார்
ஆதிமூலர்
சொந்தமாய் வாழுங் கோவில் தூபையைக்
கண்டபோது
அந்தமா மலர்கள்தூவி அடிக்கடி வணங்கியாடி
சிந்தையில் துயரஞ் சொல் சென்னித் தாழ்ந்
திறைஞ்சலுற்றான்

வசனம் :

அகோ சுவாமி அதெப்படியெ
ன்றால் ஆதிமூலீசர் திருநாட்டிலே வாராநின்ற
நொண்டியானவன் சுவாமியாருடையத் திருக்கோ
விரிலே ஆதிமூலீசரைக் கண்டு வணங்கிச்
செல்லுகிறான் பாராக்கு

7. தாடைத் தோந்தான தந்தனானா தாதனானத்
தொந்தா டைத்தந்தனானா
சோதியேபிறை சூடியாரே யிரு
துண்டான காலுங் கையும் உண்டாக்குவீரே
ஆதிமூலீசரும் நீரோ உம்மை
அடுத்தேன் எனக்குவசம் கொடுத்தருள்வீரே
அஞ்செழுத்தை நெஞ்சினிற் குறியேன் – உம்மை
யல்லாமல்கால் கைதா வல்லார்களறியேன்
வஞ்சக தொழில் புரியச் செறியேன் – சத்தி
வர முறை ஆதிமூல சாமி உனைப்பிரியேன்

உம்பர்கள் பணியும் பெருமானே - யினி
உன்னைஎல்லால் வேறு தெய்வம்
தன்னையறியேனே
நம்பினேனே உன் பாதத்தைத் தானே – கங்கை
நடக்க வருள்வாய் நினது அடைக்கல மாய்தானே
காரங்கதாரனுக்கு கைகாலை யின்று
தரித்ததுவளர திட்டம் குரிப்பதுபோல
பாரெங்குமளியவங்கண்ணலே இருடைய

8. பார்த்தருள்வாய் ஆதிமூலமூர்த்தியென் மேலே
கடினகனவிலெழுந்தேன் – எங்கள்
கரை கண்டேன்கானுங்கை நறுக்குண்டு வந்தேன்
இமை உனக்கே புகுந்தேன் - யினி
அமையு முமையுதித்து சமை மெல்ந்தேன்
தலைகவிழ்ந்திருந்திடலாச்ச – ஊர்
தானெங்கும் திருடியென் மானங்கள் போச்சு
உலகத்தில் பார்த்தவற்கு லுச்துயினி
வுட் பொன்னா சொன்னேனுன்றன்
அளிப்பதே யேச்சு

சிறுத்தொன்டன் பூசைகள் மெய்யா – பல
சின்னமானது ண்டம் கூட சொன்ன தென்ன
தெய்வோ
அறுத்திட்ட காரிகை வளர்த்தையா – என்னை
ஆதரிக்க வேணும் முவைத்தரித்தவய்யா
அம்பாள் அமுர்தவல் தாயே – எங்க
ஆதிமூல யீசரிடம் பாதி கொண்டாயே
கொம்பானமுகனைப் பெற்றாயே – காலுங்
கையுங் குறைந்ததும் வ்ளர்ந்திட
வர்மந்தருவாயே –
தானந்தேந்தானந்தமானா

நத்தவெண்டு திரு

9. மூலநாதா ஆதிமூலநாதா – உன்னை
முழுதும் நம்பினேன் ஆதிமூலநாதா
ஆலகால விஷம் உண்ட நாதா - சில
காமனை எரித்தப் பிரசண்ட நாதா (மூலநாத)
ஆடவறியேன் உன்னைப்பாட வறியேன்–உந்தன்
அன்பொடு நாடனும் தினமுங் கூடிவறியேன்தேடி
உன்பாதத்தை மலர் சூடவறியேன் – குலத்
தெய்வமென்றனு தினமும் நாடவறியேன் – (மூல)
நகைத்துத் திரிபுரத்தை யெரித்தவனே – யன்று
நமனை யொருத்தரம் சங்கரித்தவனே
பகைத்து புயினையினி தளை உரித்தோனே –
அருள்
பார்த்தருளவேணும் கொன்றை தரித்தவனே(மூல)
ஆதார முன்னையல்லால் வேறேது – யென்னை
ஆளாதிருக்கவந்தவரேது
பாதாவிந்தமன்றிட் பேரேது – உன்னைப்
பணியும் பத்தருக்கிடர் வாராது
(மூலநாதா – ஆதி மூலநாதா)

வசனம் :

இப்படியெல்லாம் ஆதிமூலீசர்
வணங்கானின்ற நொண்டியைப் பார்த்துச்
சபையார் கேழ்ப்பது
ஆதிமூலீசர் நாட்டில் அணுகிய நோக்குகேளுன்

சாதியே துன்பே ரேது தந்தைதாய் உந்தன்னூரை
தீதில்லா துடைக்குக் கையால் வேதினால்
சேதம் வந்த
தோதுவாயிதனை யெல்லாம்
ஒன்றெளியாமல்தானே

வசனம் :

அகோவாகும் பிள்ளாய் நொண்டி
யிந்த ராச சபையிலே வந்து பாடி யாடிக்
கொண்டாயல்வேற அதுவு மெத்த
சந்தோஷமாச்சுது
உன்னைப் பார்த்தால் ராசாக்களாண்மயிலே
கன்னக்கோலை வைத்துச் சோரஞ்செய்து கை
காலறுப்புண்டு வந்தவனைப்போலே காணுது
அப்படி
ஊனமானால் சொல்லும் பிள்ளையாய் நொண்டி
ஆனால் சொல்லுகிறேன் கேளுங்கோள்சபை
யாரே

தரை மெய்க்கும் வேறு : தரு

10. ஆதிமூலர் வரையில் கொலுவிருக்கும்
துரைமக்களே ஒன்று சொல்லக் கேளீர்
சதிருடன் யாருஞ் செய்யா விதி செயத்
திருட்டைநான்
பதியில் திருடிப் பெயர்ப்படைத்தேனோ

காரொடுங் கந்தத்தர் யாரோறறிந்திடவே
சேரோடுங்கோவணமுந்திருடவில்லையோ
கந்தனுங்குறவன் பெண்ணை அந்தரங்கக்களவில்
வந்துசிறை யெடுத்திட்ட வார்த்தையும் பொய்யோ
படியுண்ட மாயன் வெண்ணெய்க்
கடையுண்டதைத் திருடி
அடியுண்டதையுலக மறியாதோ
பாடிக்குளாயர் மங்கை ஆடைத்திரள் திருடி
ஓடிக்குருந்தின்பின்னும் ஒளிக்கவில்லையோ
மண்டலத்தில் நானொருவன் நொண்டியானவகை
தன்னை
கண்டி கட்சியாகச் சொன்ன காவலரே
வானோரில் அங்கப்பமு தானோரில்லையோ
அதை
நானே சொல்லுகிறேன் கேளீர் சபையோரே
வேதன் விதியினாலே கால்கைசேதமானேன் –
அந்த
வேதன் தலையிழந்த விந்தை கேளீரோ

11. வெய்யவனும் வீரபத்திரன் கையினாலே
முகத்தறைப்புண்
டய்யமாகத் தந்தம்ப முதான தில்லையோ
பார்க்கவனும் பண்டுவதி மார்க்கமதனாலேவிழி
தோற்க நின்ற தரியீரோ துரைமாரே
பாரினில்ல் பிடித்த வீரனுக்கு வேற்றி பெற்ற
மாரனுக்குடற்பழுது வந்ததில்லையோ
சனியின் பகையினாலே முனையுங்கலந்தேனந்த

சனியனென்னைப் போல நொண்டிதானல்லவோ
அண்டருக்கமுதளித்து விண்டலத்திலே உலவுக்
திண்டிரா சந்திரனுடல தேய்ந்ததில்லை யோ
அருக்கனிரதமுடியிருக்குமருண னுக்கு
உரைக்கிறேன் யிருகாலுமூனமல்லவோ
உக்கிர செலரூப னான அக்கினி பகவானுக்கு
கைக்குள்ளே பழுது வந்தகதைகேளீரோ
ஊனமது பார்க்கப்போனால் நானொருவன்
மாத்திரமோ
வானவரின்ன முண்டு மன்னவர்களே

வசனம் :

அகோவாரும் பிள்ளாய்
நொண்டி உன்னைத் திருடனென்று சொன்னால்
பரமேசுவரன் முதலாகிய தேவர்களையெல்லாம்
திருடனென்று சொல்வந்தாய். உனக்குக்
காலுங்கையு முனம்வந்தவயணமே தென்றால்
பிரமன்முதலாகிய தேவர்களை யெல்லாம்
அவைய
வங்கள்பழுது வந்தயாரே யெடுத்துச் சொல்ல
வந்தாய். அதவுமெத்த சந்தோஷமாச்சுது.
இப்பால் உன்ஊரும்பேரும் கைகாலறுப்புண்ட
துஞ் சொல்லும் பிள்ளாய் நொண்டி
அப்படியே சொல்லுகிறேன் கேளுஞ் சடையாரே

விருத்தம்

முன்னவனெங்களாதி மூலங்கேகள் வாழும்
சன்னதி முன்னே கூடிச் சபையில் வாழ்பவரே
கேளீர்
என்னுட குலமும் சீரும் யிருந்திடுகையும்பேரும்
கன்னமிட்டதுவும் என்கைக் கால் குறைந்ததுஞ்
சொல்வேன்

தரு

12. தந்தனானாதானானா தந்தனானா
தனாந்தனானா
பூமிமேலுள்ளசோர சொல்லாம் வந்து போதிக்
கதிர்க்குங் கள்ளக் கோத்திரத்திற்
ராமநாத புரந்தனிலே சொக்கநாத
மரவ ரெந்தன் தாதை கண்டீர்
என்னோடுடன் பிறந்தாரைச் சொல்ல
யின்னுமிருவர்கள் பின்னுமுண்டு
அன்னோர்க்கு முன்னோன் நான் – கள
வளுமென்பேர் சோசக் கோளரிதான்
என்னேரிலையவன் பேர்க்குடி
கேத்த திருட்டுக்கு வாய்த்த பு
பின்னோன் பெயர் கேளீர் – கெடி
பெத்தகள்வ னூர் கூத்ததாரை
மும்மூாப்திப் போர்க்கூடி நாங்கள்
மூவருஞ்சோரனூர் காவியங்கள்
யிம்மாத்திர மென்னுங் கறைத்
தெரிந்திட்டறிந்தோஞ் சொல்த் தெட்டறிந்தோம்

மந்திரவாதங் கோகரணம் மாமாய வித்தை
யிந்திரசாலவித்தை எந்திர சூனியக் காரங்கள்
குண்டம்யிடிவிலக்கு சொக்குப் பொடிமயக்கு
மோகனத் தொழிலஞ்சனங்கள் – யெதிர்
மோடன மந்திர உச்சாடனங்கள்
வாகுபெற்றிடுங்தம் பனங்கள் - யின்னு
மற்றுள்ள வித்தையும் கற்றறிந்தோம்
கூத்தவித்தைத் திறமை யெல்லாம் சத்தோ
கையாடி சோதனை செய்யாமல்
பெத்ததினா லென்னபல னென்று
பின்னோரிருவருஞ் சொன்னார்கள்
நல்;லதென்று சம்மதித்து – இந்த
ஞாலத்துள்ளோர் மெச்சுஞ் சேலத்திலே

13. வல்லமையாய்க் கூடிக் கொண்டு – நாங்கள்
வந்தோ மொருவரும்பிந்தாமல்
கடைவீதிதனில் வந்தோம் - யிதில்
கைக்காரனா ரென்று கைக்காளை
விடையர்பலங் கேட்டறிந்தோ – முத்து
வேலப்ப செட்டியென்றோலக்கமா
பல நாளங்லுர் தனிலே ஆரும்
படைக்காத காசுக் கடைக்காரான்
விலைமேல்பாரமும் பராமுகமாய் மெத்த
மேட்டிமையாய்க்கடை போட்டிருந்தான்
ஒக்கத்தனித்தனியே நாங்கள்
ஊமையைப் போலலொரு சாம மட்டும்
பக்கத்தில் மூவருமா லெக்கு

பார்த்திருந்தோங்கட்டிக் காத்திருந்தோம்
கடைதான் கலைந்த பின்பு - பையைக்
கட்டிக் கொண்டே வீடுகிட்டிக் கொண்டான்
துடரும் சனியனைப் போல்வந்து
சுற்றிக் கொண்டோம் பையைப்பற்றிக் கொள்ள
சொக்குப் பொடிக் குணத்தைச் – சற்றே
சோதிக்கவே அள்ளிப் பாதிக் கொண்டு
கைக்குளெடுத்தவன் மேல் – வாடைக்
காற்றெதிரே நின்று தூற்றிவிட்டு
நடந்தோம் நடந்தோம் உடன்வீட்டு

14. நாய்போல் வளர்த்த கிடாய்போல
துடர்ந்தான் அவன் எங்கள் பின்னே அந்த
சொக்குப்பொடி செய்த முக்கியமெல்லாம்
தெரிந்தந்தக் காதூய்மையை – நாங்கள்
தெத்து கடந்த பின் சுத்திக் கொண்டு
பரித்தேனதில்லுள்ள தெல்லாம் – மூன்று
பங்காக்கிக் கொண்டங்கே தங்காமல்
வந்தோம் வருமளவில் – வேலூர்
மார்க்கங்கண்டோமப்போ பாற்காரனும்
சிந்தாமணிப் போலே – குணத்
திக்கெ முந்தானந்த பக்குவத்தில்
இனிக் கூடி மூவருமாய் திரிந்
திட்டால் திருட்டது காட்டா தென்றே
தனித்துக் களவு செய்ய – மனத்
தன்னிய வரவருன்னிக் கொண்டு
நிதியைக் களவு செய்ய – டில்லி

நிருபனரண்மனைக் கொருவன் சென்றான்
குதிரை தனைத்திருடத் தற்கே
குமய் கோணத் தொரு தம்பி சென்றான்
ஒருவன் தனியே நான் – எங்கும்
ஓடிப்பெரும் பாதைக் கடிக் கொண்டு

15. திருவாமூங் கச்சியிலே – வந்து
சேர்ந்தேன் மனங்களி கூர்ந்தேனே
வாகாந்த சன்னதியில் – சுக்கிர
வாரத்திலே அந்த நேரத்திலே
ஓகாம் பாநாதர் – தம்மை
யேற்றி வணங்கியே போற்றி செய்ய
போனேன் பெலிபீட முன்னே சேரப்
பூவையைப் போலொரு தேவடியாள்
மீனேர் விழிமாதா – வெள்ளை
வீசிவர நயம் பேசிவர
முத்து வல்லிக் காமாட்சி - வெகு
மோகவல்லிஅனுபோக வல்லி
சித்திரவல் தங்காமுத்து - சின்ன
செல்லமுத்து நய நல்ல முத்து
சீதை சிவகாமி - செறு
செண்பகப் பெண் பெத்தப் பெண்பிள்ளையும்
கோதைக்குண மாலை – வஞ்சிக்
கொம்பனையாள் விழியம் பனையாள்
தையாள பிராமி - என்றுந்
தாதியரும் சில தூதியரும்
மெய்யான ஊழியங்கள் அவள்

வினப்பந் தினம் பண்ணி வர
மட மாமயி லெனவே - நிர்த்த
மண்டபத்திலே வந்து தெண்டனிட்டாள்
நடமாடும் பெண்ணமுர்தைக் – கண்ணில்

16. நானுங் கண்டேன் அவள் தானுங் கண்டாள்
கண்டேன் கனங்தனமும் - விழிக்
கண்டையும் பூமுடிக் கொண்டையுந்தான்
தண்தேன் துளிர்ப்பது போல்மென்ற
தம்பலஞ் சிந்திய செம்பவள
வாயும் பிறை நுதலும் – முத்து
வாண்கையும் இட்ட பூண்கையும்
தேயுந்துடியிடையுங் கொண்டு
சிந்தை கலங்கியே நந்துரகி
நதியோ திலோர்த்தமையோ புவி
கங்கையோ யென்றுஞ் சங்கையற
எதிரே நெருங்கி வந்தானப்பேய்
சென்ன வென்றேன் மோகன பின்னென்றாள்
மய்யல்குறிப்பறிந்தாள் – வீட்டில்
வாருமென்றாள் உட்காருமென்றாள்
செய்ய மலசனைமேல் – வைத்து
சீராட்டி சுகம் பாரட்டினாள்
கனிவாயிதழ்ப்பருகி - யென்னை
கட்டிக் கொண்டாள் முத்தும்யிட்டுக்கொண்டாள்
பன்னீர் சவாதணிந்தாள் – சுருள்
பாதிதந்தாள் மடி மீதிருந்தேன்
இருந்தத்தை யானறிவேன் – செய்த

17. தென்னைன்னமோ வதன்பின் னறியேன்
மகுந்துண்டவர் போல – நான்
மயங்கிகலவி முயங்கலுற்றேன்
கலவி முடிந்த பின்பு - என்னை
கையாரக் கட்டிக் கொண்டையா வென்றாள்
பலநாள் தவம்புரிந்தேன் – அந்தப்
பாக்கியம் நீ வந்து வாய்க்கப் பெற்றேன்
என்றாள் என் கக்கத்திலே – வைத்
திருந்த முடிப்பைத் தெரிந்துக் கொண்டாள்
சென்றாள் தன் தாய்க்கே - யிந்த
சேதி சொன்னாள் ளந்த சூதுக்கள்ளி
சதிகாரமாயி அவள் – கெட்டத்
தாய்க் கிழவி பொக்க வாய்க்கிழவி
கதவோரந்தன்னில் வந்தாள் – என்னைக்
காணும் பொழுதினி நாணங் கொண்டாள்
நரைத்த தலை அசைய – மொழி
நாப்பதறக் கிழவி மூப்பதனால்
இசைத்து கனத்திருமி - மாமி
எட்ட நின்றே சொல் தெட்டவந்தாள்
மகராசன் நீ யொருத்தன் – இங்கே
வந்ததேதோ பொன் தந்த தென்றாள்
செகராசர் வந்தாலுங் - கிட்டிச்
செரோ மென்றாள் யெட்டிப் பாரோ மென்றாள்
பணமேது காசேது – உந்தன்
பட்சமே பொன்னூறு லெட்சமென்றாள்

18. குணமே பிரதானமாய் – நாங்கள்
கொண்டிருந்துன் கீழ்ப் பெண்டிருப்போம்
மகளும் அடியேனும் – வீடு
வாசலுந் தேடிய காசுடைமை
சகலமும் உம்முதென்றே - என்னை
சாட்டிச் சொல்க் குரங்காட்டிக் கொண்டாள்
விலைமாதர் போலல்லவே – மகள்
மேதையென்றாள் மனக்கோழையென்றாள்
வலமோடிடமறியாள் - சின்ன
மடமையென்றாள் கார்க்கக் கடமை யென்றாள்
கட்டிமகள்கக்கேத்த ஆசைக்
கண்ணாளா நீ மோடிப் பண்ணாதே
எட்டோடிரண்டறியாள் – மகள்
யேழை யென்றாள் மெத்தப் பேதையென்றாள்
காயக்கவிதைத்தையினால்க் – கல்லுங்
கல்லுங்கரைந்திடச் சொல்லுகின்ற
மாயக் கிழவியினாள் – என்
மதியிழந்தேன் கைநிதியிழந்தேன்
கானார்க் குழலமடவார் – செய்தக்
கள்ளத்திவிடாமல் கையிலுள்ளதெல்லாம்
நானூறும் ஐந்நூறும் வாரி
நாளெட்டில் தோத்திட்டேன் ஔிதமாய்

19. பைதானிருக்க மட்டும் அதைப்
பார்த்தென்னை வீட்டினிந் சேர்த்தழைத்தாள்
கைதானிளைத்த பின்பு - போடா
கள்ளா வென்றப்பாலே தள்ளிவிட்டாள்

மனதுதடுமாறி பின்னும்
வாசல் நின்றேன் சினத்தேசுகின்றாள்
தனதாகச் சொன்ன தெல்லா – முழு
கற்பனையோ அயன கற்பனையோ
விழலுக்கு முந்துலை தானிட்டு
வீணிறைத்தோம் வேசி நாணயத்தை
பழகித் தெரிந்தோமென்றே - காசிப்
பட்டணம் விட்டப்பா வெட்டச் சென்றேன்

விருத்தம்

கச்சிப்பட்டணத்தி னெல்லைக் கடந்து
வேசியரைச் சற்றும்
இச்சிக்க வொண்ணா தென்றே
யெண்ணியே கன்னக் கோலை
மச்சிட்ட அரண்மனைக்குள்
வைத்து மன்னவர்களெல்லாம்
மெச்சிக் களவு செய்தவிபரம் நான்விளம்புவேனே
தனனாதனதனனா – தனிடைதனானா
தனத னதனனா தனதனன்னா
திருட்டுத் தொழிலுக் கென்னைத் தான்
ஆண்பிள்ளைச் சிங்க மென்றுரைப்பாரெங்கள்
வங்கிரத்துள் ளோர் பொட்டுக்
கொடுத்தருமொவ்வார்
சூானென்றும் பேரும் படைத்தேனிந்தப்
பாரெங்குமே

20. கரிபரிதனைத் திருடுங்- கன்னடக் காரக்
கண்டனென்பவருக்கொரு முண்டனானே
திரவியந்தனைத் திருடுஞ் – செகத்துளத்
திருடருக்கு நானொருபுருட ரத்தினம்
பகட்டுமகளவுத் தொழில் தான் – நானிந்தப்
பாரெங்கும் பிச்சையிட்ட பேருக்கென்று
தகட்டுக்குளேந்திரமொன் – றெழுதியென்
தலைக்குள் வைத்தேன் திருட்டுப் பக்க வென்றே
பாதாளந் தனிற்கிடக்குந் திரவியம் – பார்த்தே
தெரிந்திட வொரு மந்திரமறிவேன்
வேதாள பூதங்களை மட்டுக் கூட்ட
வேறறிவே னிதை யாரறிவார்
விடிய முன்போச ராசா – மகள் தன்னை
வேண்டி மஞ்சத்தோடு கோட்டைத் தாண்டி யெடுத்து
கெடிபெறுக் காலுக் கண்டனென்றுங்
கேட்டுமிருப்பீரவ னென் பாட்டனாகும்
பருத்துடன் பூரிக்க வே – நெற்றியில்
பலதினந்தோறு மொகு திலதமிட்டு
உருத்தெரியாமல் வந்து – ராயர்க்கலத்
துண்டவனுமெங்கள் வீட்டுத் தொண்டனாகும்

21. கருவிய டில்லிப் பாட்சா படுக்கும் பொற்
கட்டிலைத் திருடக் கண்டு வெட்டித் துண்டமாய்
யெறிகின்ற வேலையினு வுந்தாட்டுக்
கீாலிலை யென்ற கள்ளர்போனானே
பொய் மொழியாப்பு தலைவன் – ஆட்டூண்ப்

பொசிப் போமென்றுரைத்திடு – அசுப்பதனை
கைமழைதனைத் தூவுங் – தொட்டியக்
கள்ளன் மகளுக் கருமைப்பிள்ளை நானே
குலமோ மறவர்குலங் கள்ளர்தங்
கோத்திரங்காணிது மாத்திரமோ
தலமோ சொல்ல வென்றால் – கள்ளச் சாதி
புறந்தரமனாதபுரம்
அஞ்சே னொருவருக்குந் - திருடிடத்
தகைப்பட்டாலு நெஞ்சந் திசைப் பாகி
கெஞ்சே னொருவரையும் – செகமெங்குங்
கெடிபட்டதும் மெத்தத்து டிப்பட்டதும்
துசையாது சைகளெல்லாம் – எனக்கொரு
துரும்புபோலே தோற்றும் யிரும்பெனவே
கரையா மனதையெல்லாங் கசைக்கவே
கையிலே யிருந்தந்த மையுமெடுத்தேன்

22. சொக்குப் பொடியெடுத்தேன் – குளி
சைக்கிளிலுமீத்தெடுத்தேன்
உச்சி உருமத்திலே – ஆருக்கும்
தெரியாமல் வீடு தொறு
மச்ச மறந்திருடவே பச்சிலைகளும்
வேருக்கள் நாலாறும் மூகை
விதங்களில் பத்தெட்டு மிதம் பெறவே
எடுத்தடி மடிக்குள் வைத்தேன் – நெற்றியில்
எழுதும் திலகத்தையும் தொழுதெடுத்தேன்
மிடுக்குளத்துட்டுத்தடியும் – நல்ல சுப
வேளை பார்த்தெடுத்துத் தோளில் வைத்தேன்

முறியாப் பொரும் பூட்டு மளுக்கென்று
முறித்திடும்பச் சிலைகளைப் பறித்துக்
கொண்டேன்
அறியாப்பிள்ளைகள் போல் வேட
மென்றாக்குங் கிரிகை யொன்றும் தூக்கிக்
கொண்டேன்
சந்திர கிரணந்தன்னில் வெண்ணெய் நல்லூர்
தாண்டவப் பத்த னென்னை வேண்டிச் செய்து
விடிய முன்போச ராசா – மகள் தன்னை

23. சிந்தை மகிழ்ந்து கொடுத்தக் கன்னக் கோலை
தொண்டனிட்டுறைஞ் சிவலங்
கொண்டெடுத்திட்டேன்
பேறங்கீயூர்க்கருமான் அவன் மனம்
பெறுக் கோடளித்த கத்திரிக்கோலைச்
சோரங்கள் பக்கவேறே - நான்வலஞ்
சூழ்ந்து முக்காலுஞ் சென்னி தாழ்ந்தெடுத்தேன்
எட்டொண்ணா மதிளுங் – கடக்கறூ
லேணியெடுத்தேனிருகை பாணியெடுத்தேன்
தொட்டுச் சனிகண்டு செய்தேன் – என்னுடை
சோளிகை தன்னைத்தருடாரி மெடுத்தேன்
தஞ்சாவூர்க்கு சங்கந்தடியில் திட்ட
சாத்திரிய முல்லாமும் – ரமும்
கஞ்சா குடுக்கை முதல் – தேத்த
கம்பளி தன்னைக் கூடக் கும்பிட்டெடுத்தேன்
எடுத்தேன் ஆயுதமெல்லாம் - திருடுதற்
கேத்தவிடமே தென்றெண்ணி பார்த்துக் கொண்டு

தொடுத்தேன் ஆண்டி வேடம் – அப்போ
சொல்லித்து வலத்தி லொரு பல்க் குரல்தான்
பார்த்தேனதை ஆய்ந்து உடனே
பதத்திடுங்கள் வென்று கலக்க மறப்
பேர்த்தோடி நடந்தேன் – நல்னன்

24. பிடரிப் பிடித்துத் தள்ளுந் துடர்விதியால்
சாலை வெட்டியைப் பிடித்தேன் – அந்தத்
தடந்தனில் வெகு சனம் நடந்தது கண்
டேலவும் வர்கள் பின்னே – கடிக் கொண்
டெத்டதி சையும் புகழ்க் காளத்திதனில்
வந்தேன் அப்பதியில் - திருநாள்
வழங்கியதும் வல விழுங்கியதும்
சந்தோஷமாகக் கண்டேன் - திருநாள்
சந்தடியிலே திருட்டுப் பந்தடியைப் போல்
வாய்த்திடு மெக்கெனவே – கோடிப் பொன்
வந்தது போலே நினைத்து சந்துவழிபோய்
ஆத்திப் பனை அடி - அமர்ந்த குளத்தடி
ஐங்கரனைக் கண்டு நான் கும்பிட்டு நின்றேன்
தொழுதப் புறம் நடந்தேன் – ஊர்கார்க்கும்
துற்கையுட சன்னதியில் உக்கிறங்கண்டு
பழுத்திடுமலரால் – அர்ச்சனை
பண்ணிக் கொண்டப் போ தொன் றெண்ணிக் கொண்டு
சேணாடர்கள் பரவும் –வடிவுள்ள
சித்திர னூர்பிரண பத்திரகாளி

25. வீணாகச் சொல்ல வில்லையிப் புவியில் மே
துக்கப்படுங்களவு கைக்கப்பட்டால்
உன்னாலைய மதிளுஞ்சிகரமும்
உரை மாத்திரிய பத்தரை மாத்தால்
பொன்னால் மேய்ந்திடுவேன் - யில்வார்த்தை
பொய்யல்ல வம்மா கிரபை செய்யெனச்
சொன்னேன்

சொன்ன மொழியைக் கேட்டு
கழல் பெருத்த தொழிவெட்டினால்
பத்திர காளியு ரைத்தாள் - யின் நிலம் த்து
பகாரி - தேடிய பொன்
னெட்டிப்பழ மென் னெஞ்சைக் கொட்டிப்படுத்து
அல்ல வென்றே நினைத்தால் – கைகாலுக்
காக்கினை வருமது யோக்கியமல்ல
இல்லையென் றோர்க்குதவா வீட்டினில்
என்ன பொருளிருந்தாலுங் கன்னமிடென்றாள்
அல்வரந்தனை வாங்கிக் – காளத்தி
அப்பரைக் கண்டேன் காளவுக் கெப்படி நீயுஞ்
செவ்வரந்தன்னைத் தருவோ யென்று சொல்ச்
செவித் தேன் சந்தடியில் கடவித்தானே

26. மருக்காவனம் சூழம் – வீதியில்
மாவாமரிஷி பதிதினி மேலேறி
திருக்காளத்தி நாதர் – அஞ்சாந்
திருநாளில் பவனி வரும் நாளில்
அரதர வெண்படகு மடி தொழு
தன்பபாயருள் புரி யென் படகும்

சிரமிசைக்கரங் கடப்பி நின்றுளத்திற்
சிந்திப்பாருங்கண்டு சந்திப் பாரும்
இருவினை துடரறுப்பா – யென்றும்மூந்
தெழுவாகு மோத் தொழுவாரும்
திருகுவை பரகதியை யென்று வினைத்
தணிவாரு மோடிப் பணிவாரும்
இப்படியாகவேதான் – அனைவரு
மேத்திக் கொண்டென் னென்னமோ பேத்திக்
கொண்டாள்

அப்பொழுதினிற் தானே விந்தையோ
டாரியக் கூத்தாடி னாலுங் காரியத்திற் கண்
வையாதவரை யெல்லாம் புவிதனிற்
மக்கட் பதரென்றே ன் றே சொல்லத் தக்கதாகும்
அய்யா அவரவர்கள் கேழ்க்கிற
அந்தவரமே லெனக்குச் சிந்தனையில்லை
எனக்கொரு மனு வேணு மது நீ
ரென்ன வென்று மலையாதீர் பின்னை
யொன்றல்ல
நினைத்தது கைகூடவே – அனைவோகும்
நித்திரையிலே மயக்கம் பெற்றிடச் செய்தால்
தேவரீர்க் கிருபையினால் மனக்குறை
தீர்த்துக் கையாலான மட்டும் பார்த்துக்
கொள்வேன்

27. ஆவலால் செய்யுங் களவை - நீரு
மரியாது போருந்தால் பெருமைப் பொது
மைய னென்றேனப் பொழுதிற் – காலத்தி

யீசர் பவனிவந்துல் வாசமதாய்
சென்றார் மண்டபத்தில் திருநாள்
தெரிசனஞ் செய்ய வந்தப் பரிசனங்கள்
அவரவரிருப்பிடத் தை நாடிப் பங்
கடுத்துக் கொண்டேயசந்து படுத்துக் கொண்டார்
கவனம் வேற தனாலோர் முழுதுங்
காவல்காரன் போலே அந்தக் கோவிலைச் சுத்தி
வந்தேன் துண்டிவெறிவோர் – மிதப்பிற்
கண்வைத்தது போலலே திருட்டுச் கிச்சையும்
வைத்து
பொந்தாந்தை தனைப்போலும் – இமையவர்
புங்கவர்கள் பார்வைபோலுமங்கவர்கள் மேல்
பார்த்துக் கொண்டே நடந்தேன் – மண்டப்

28. படியுலுங் கொடிக்கம் பத்தடியிலு மல்லூ
ஊர்த்தெரு வீதியிலும் – தேரடி
ஓரத்திலும் பிர காரத்திலும்
இனத் தொடும் பிரியாமல் – அவரவர்
யிட்ட உடைமைக ளொடுங் கட்டிப் படுத்தார்
மனத முக்கில்லாமலே குறட்டையும்
வாங்கிக் கொண்டே அசந்து தூங்கிக் கொண்டார்
கத்திரிக் கோலைக் கையிலெடுத்தேன் –
மனதினில்
நித்திராத்தேவியைத் தானுந் தோத்திரஞ்
செய்தேன்
வைத்தபொருளெடுப்பவர் போல் – உருப்படி
பத்துலட்சத்துக் கதிகஞ் சுத்திகக் கொண்டபின்

கையது சக்க மட்டுங் கத்தரிக் கோலைக்
கையாடினேன் யிரக்கம் வையாமலே
வெய்யவன் உதிக்குமுன்னே கோவில்விட்டு
வெளிப்பட்டேன் மனதுக்களிப் புற்றனன்
(தன்னாதனதனனா)

விருத்தம்

களித்தபின் யிதனையெல்லாங் கச்சிமோகன
மின்னாளுக்
களித்தனமாகிற் கூடி அனைவதற்கிணை
வாளென்றே
சுளித்தவள் மன்பவு வைத்த
சொல்மறந்தாசையாலே
யகா ஒளித்து முன்நொண்டி வேஷம்
ஒளித்துமுன்னுருவு கொண்டேன்

தரு

29. தெந்தினதினதினனா தெந்தினாதினாதினா
தெனானானா தெனானானா

ஆண்டி வேஷம் விட்டேன் னானோ
டாண்டியா வதுந் தோன்றாமல்
தாண்டித் தலை விதியால் – கச்சித்
தேகையர் செய்திடு மாய்கையினால்
பாண்டித மென வறிந்து முன்னே

படுத்தின பர்டையும் யெடுத்தெறிந்து
வேண்டிய உடைமை யெல்லாம் – பொழுது
விடிந்த பின்னேடுத்து முடிந்து கொண்டு
மூட்டைய தாய்க் கட்டிக் – கச்சி
மோகன மின்னா ளாகமெய்க்கக்
காட்டிட வேணுமென்றே - நானொரு
காணிக்கைப் போற் கொண்டாணிக்கையாய்
பாட்டொன்று பாடிக் கொண்டு – நடத்தெரு ?
பாதை சென்றே யொருதாதி கண்டு
வீட்டினிலுள் புகுந்தாள் – மோகன
மின்னாளுக்கிது சொன்னாளே
ஆச்சியென் முகதாச்சி - நம்முட
அத்தானுன் மேல் பித்தாகி
கூச்சமதில்லாமல் மூட்டையுங்
கொண்டே வாறான் கண்டேநான்
வாச்சது நமக் கெனவே சொன்ன

30. வாக்கறிந்தே அந்த தாய்க் கிழவி
நாச்சிமுத்த பிராமி - நீங்கள் கை
லாகுவிங்கழைத்தேரு மென்றாள்
என்றவள் சொன்னபின்பு ஆலாத்தி
ஏந்திக் கொண்டிருவரும் பூந்திருப்போம்
நின்றனர் அப்போதில் நானும்
நெருங்கினன் அவள் தெரு மருங்கினிலே
சென்றதோ வித்தனை நாள் - சித்தந்
திரும்பிட வெனச் சொல்க்கரும்பு மொழி
குன்றெனு முலைமடவாள் – உம்மைக்

கூப்பா(டு)றாமளென்று காப்புமிட்டாள்
அழைத்தா ளென்றவுடன் பட்டத்
தானை மேலலேறி னானெனவே
செழித்தேன் மெள்ளமெள்ள - வீட்டினிற்
சென்றேன் கண்டாள் யின்றல்லவோ
பிழைத்தேன் வாருமென்றாள் – அந்த
பெருமையி லொரு புயமிருபுயமாய்
தழைத்தே னெழுந்திருந்தாள் – நானுந்
தன்னைமறந்திது சொன்னேனே
ஏந்தானெழுந்தீர் மெத்தையில்
விருமிருமென்றங்கருமையதாய்
நான்தான் சொன்னவுடன் புருஷரை
நம்ப வொண்ணாதென்றென்பது போல்
காய்ந்தார் நட்டாத்திற் – கைவிட்ட

31. கணவனை வசப்படுத்த வஞ்சினை மொழி
தாய்க்கிழவி கிட்டவந்தனள் – என்மகள்
உந்தனைவிட்டஞ்சடைந் தீண்டறியாள்
அன்னமும் அருந்தறியாள் விழிபொருத்தறியாள்
மஞ்சளுங் குளித்தறியாள் – வேறோர்
மாப்பிள்ளைமா ரைக் கைக் கூடப்பறியாள்
சீவாள் குழைமுடியாள் – பாக்குத்
தின்னாள் பழகிய வன்னாளும் தொட்
டாவேசம் போல தலை சுத்தாடுவாள்
உந்தனைத் தேடுவாள் பின்
பூவே சூடறியாள் கெந்தமும்
பூசறியாளே ஒரு காசறியாள்

சாவாமற் கோத்த மீன்போல்
தளர்ந்தாள் யென்மகள் உலர்ந்தாளே
பூராயக் கிழவியிப்படிப் போதனைப்
பண்ணினள் சாதனையாள்
வாராய் மருமகனே நானுன்னை
வாசல்வரா தென் றேசினதும்
சாராயக் குடியால் உன்னைச்
சாத்தியே வாய்மதம் பேத்திவிட்டேன்
ஆராய்ந்தறியாமல் – மகளைவிட்
டகல்விரோ வென்று புகல்வாளே
அகலவும் விடுவர்க் ளோ – உனைப்பிரிந்
தன்றுமுதுல் கொண்டின்ற ளவும்

32. மகளுக்கு மெத்த னுக்கு மடிபிடி
வழக்கல்லவோ உம்மை அழைக்கச் சொல்
சகலமுமறிந்தீர் – என்னுட
தய்யலைக் கடி உன் னய்ய மறச்
அகமனுபவித்தி ரெண்றே - கிழவியுஞ்
சொல்க் கொண்டேகினள் யில்ல த்திலே
மாமியாரும் போ னாள் – துரைச்சியும்
வந்து கொண்டொருமுத்தந்தந்து கொண்டாள்
சாமி நீ யென்ற யிருந்தேன் - யிப்படிச்
சதி செய்வை யென்பதை யறியாமல்
காமலாகிரியினாலே - உந்தனைக்
காணாமல் பணி பூணாமல்
ஓமலுக்காளா னேன் – என்னுட
உருதியுந் திருவுள மறியு மென்றாள்

கோணாமதிமுகத் தாள் பின்னையுங்
கூறுவள் தினந்தினந்தோறும் மென்னை
காணாதிருந்தாயே – உன்மனங்
கல்லோ அன்பு சற்றில்லா தோ
ஆணாய்ப் பிறந்தவர்க்கு - யிப்படி
அழுத்தம் வந்தா லென்னெழுத்தல்லவோ
விணாய்த் தான் பழகி இத்தனை
வேதனையாச்சுதென் றோதினளே
இன்னமும் பலவிதமாய்ப் பாசாங்
கெடுத்துரைத்தாளே அருளுங்
கொடுத்தணைத்தாள்

33. மன்னினள் சேலைதன்னை – பொன்னரை
மானில மென்வசந் தானளித்தாள்
பின்னனளிரு காலைக் கொங்கையைப்
பிசைந்துப் பந்தடியென வசந்துக் கொண்டேன்
என்னடா சாமியென்றே மேல்பாய்ந்
தேறிக் கொண்டே தொழில் மாறிக் கொண்டேன்
கன்னலும் மொழிச்சரியாள் –கதும்பை
கல்ன பின்னதழ்க் கெல் வைதந்தாள்
சன்னகம் வந்தவர் போல தாடனக்
தட்டியபின் குரலெட்டிளித்தாள்
பன்னகப்படத்திடைவாழ் மனிதனைப்
பத்திய பின்பொரு முத்தமிட்டாள்
என்ன சொல்வேன் தைநானிகுவர்க்கும்
யேகமதானது போகமுமே
யேக போகத்தாலம் பாதகீ

யிட்டமருந்தின் மருட்டாலும்
ராக கீதத்தாலுங் – கலவி
நயத்தாள் செய்யுமதி செயத்தாலும்
தாக சோகம் வரலே – அவள் செய்யுஞ்
சதியாலும் தலை விதியாலும்
மோகமாகித்தானே - தினந்தின
முயங்கிக் கொண்டேன் மன மயங்கிக்
கொண்டேன்
மைப்பொருள் விழிமொழியாள் – மாய
வலைதனிற் சிக்கிய நிலையறிந்து

34. கைப்பொருள் பறிப்பதற்குக் காலங்
கருதியேன் மாமியென்னருகில் வந்தாள்
எப்படியான் சொல்வேன் – கொப்புக்
கொண்பது பொன்க ளுண்பதற்கு
முப்பதுபொன் வேணும் நூறுபொன்
மூக்குத்தியுடன் சிந்தாக்குச் கென்றாள்
